**சுருக்கம்**

வேளாண்மை - உழவர் நலத் துறை – 2022-2023 – ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை - மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு - வேளாண் தொடர்பான பணிகளை மேற்கொள்ள வேளாண் கூலித் தொழிலாளர்கள் பதிவு செய்வதற்கான செயலியை உருவாக்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வேளாண்மை - உழவர் நலத் (வே.உ.2) துறை**

திருவள்ளுவர் ஆண்டு 2053, சுபகிருது, வைகாசி மாதம் 17-ம் நாள்

**அரசாணை (டி) எண்:142** **நாள்: 31.05.2022**

படிக்கப்பட்டது:

வேளாண்மை இயக்குநரின் கடித எண். பொது2/ 69994 / 2021,
நாள் 30.03.2022 (ம) 13.05.2022.

--------

ஆணை:

மாண்புமிகு வேளாண்மை -உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 19.03.2022 அன்று சட்டமன்றப் பேரவையில் 2022-23-ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையினைத் தாக்கல் செய்தார். வேளாண்மை நிதிநிலை அறிக்கையில் வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகளில், கீழ்க்காணும் அறிவிப்பும் ஒன்றாகும்:-

**அறிவிப்பு எண்.35 / பத்தி எண் 11 (ix)**

> "விவசாய கூலித் தொழிலாளர்கள் தங்களது விவரங்களை நேரடியாகவோ, முகவர் மூலமாகவோ மாவட்டம், வட்டம், கிராமம் வாரியாக, திறன் ரீதியாக புதிய செயலியில் பதிவு செய்து கொள்ள வழிவகை செய்யப்படும். இதன்மூலம் விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு வேளாண் சேவை நிறுவனங்கள் மூலம் போதிய வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதோடு விவசாய பணிகளை உரிய பருவத்தில் மேற்கொள்ளவும் இச்செயலி பயன்படும்".

2. மேற்படி அறிவிப்பு தொடர்பாக, வேளாண்மை இயக்குநர் தனது கருத்துருவில், தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயத்தைச் சார்ந்துள்ளது என்றும் தமிழ்நாட்டில் வேளாண் பயிர்களின் நிகர சாகுபடிப்

பரப்பு 48.33 லட்சம் எக்டர் ஆகும். இதில், 27.63 லட்சம் எக்டர் பாசன முறையிலும் 20.70 லட்சம் எக்டர் மானாவாரி முறையிலும் சாகுபடி செய்யப்படுகிறது என்றும் தமிழகத்தில் வேளாண் கூலித் தொழிலாளர்களின் தேவை அதிகரித்து வருகிறது என்றும் குறிப்பிட்டு வேளாண் கூலித் தொழிலாளர்கள் தங்களின் மாவட்டத்தை விட்டு பிறமாவட்டம் மற்றும் மாநிலங்களுக்கு செல்வதனைத் தவிர்த்து உள்ளூரிலேயே அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க ஒரு செயலி உருவாக்கலாம் எனத் தெரிவித்துள்ளார்.

3. மேலும், விவசாயம் ஓரளவு இயந்திரமயமாகி விட்ட போதிலும், விதைப்பு, களையெடுத்தல், நீர்ப்பாசனம், உரமிடுதல், பயிர்ப்பாதுகாப்பு, அறுவடைசெய்தல், கவாத்து செய்தல் மற்றும் அறுவடைக்குப் பிந்தைய செயல்பாடுகள் போன்ற விவசாயப் பணிகளுக்கு, விவசாயத் தொழிலாளர்கள் தேவைப்படுவதால், வேளாண் கூலித் தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்படுகிறது. சமீப காலங்களில், சொட்டுநீர் / தெளிப்பான் முறையை இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும், ஆளில்லா விமானங்கள் மூலம் பூச்சிக்கொல்லி மருந்துகளைத் தெளிப்பதற்கும் திறமையான தொழிலாளர்களின் தேவை அதிகரித்து வருகின்றது என்றும், 2001-ம் ஆண்டைய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் விவசாயத் தொழிலாளர்களின் சதவீதம் 31% ஆக இருந்தது என்றும், இது கடந்த 2011-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, 29.2%-ஆகக் குறைந்துள்ளது எனவும் தெரிவித்து, மாநிலத்தில் திறமையான விவசாயத் தொழிலாளர்கள் கிடைப்பது குறித்த தரவுத்தளம் அமைப்பது அவசியமாகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

4. இச்செயலியின் குறிக்கோள், நடைமுறை (ம) விளைவுகள் ஆகியவற்றை இவ்வரசாணையின் இணைப்பில் காணலாம். மேலும், வேளாண்மை இயக்குநர் கீழ்க்கண்ட கூடுதல் விவரங்களை அரசுக்கு தெரிவித்துள்ளார்:-

- சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களும் இத்திட்டத்தில் அடங்கும்.
- இத்திட்டத்தில் பதிவு செய்வதற்கான வயது வரம்பு 18 முதல் 60 வரை.
- வேலை நேரம் காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை.
- வேளாண் தொழிலாளர்களுக்கான தினக்கூலி மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுபடும். வேளாண் தினக்கூலி,

தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குவது, அந்தந்த மாவட்ட விவசாயிகளே நிர்ணயிப்பார்கள். இந்தச் செயலி விவசாயிகளையும் தொழிலாளர்களையும் இணைக்கும்.

- இத்திட்டத்தினை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்திட நிதி ஆதாரம் ஏதும் தேவையில்லை என வேளாண்மை இயக்குநர் குறிப்பிட்டு, இச்செயலியின் விளைவுகளை பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

i. விவசாயிகள் திறமையான வேளாண் தொழிலாளர்களை, முன்கூட்டியே கண்டறிந்து, அவர்களை தக்கத்தருணத்தில் பயன்படுத்திக் கொள்ளலாம்.

ii. விவசாயக் கூலித் தொழிலாளர்கள் இதனால் ஆண்டு முழுவதும் வேலை வாய்ப்பினை பெற இயலும்.

iii. திறமையான தொழிலாளர்கள் நம் மாநிலத்தில் இருந்து பிறமாநிலத்திற்கு இடம் பெயரும் நிகழ்வு குறையும்.

5. வேளாண் உற்பத்தியில் விவசாயத் தொழிலாளர்கள் முக்கியப் பங்காற்றுவதால், ஒரே தளத்தில் திறமையான விவசாயத் தொழிலாளர்களைக் கண்டறிவது அவசியமாகும் எனவும், வேளாண் தொழிலாளர்கள் குறித்து உருவாக்கப்படும் இச்செயலியின் மூலம் விவசாயிகள் எவ்வித இடர்ப்பாடுமின்றி, வேளாண் பணிகளை மேற்கொள்ள இயலும் எனவும், இச்செயலியில் விவரங்கள் பதிவு செய்வதற்கு மூன்று படிவங்களை உபயோகப்படுத்தலாம் எனவும் தெரிவித்துள்ளார். மேலும், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் ஆண்டு முழுவதும் மாநிலத்தில் வேலை தேடுவதற்கு இந்த செயலி உதவும் எனத் தெரிவித்து மேற்கண்டவாறு விவசாயக் கூலித் தொழிலாளர்களின் நலனுக்காக 2022-23 ஆம் நிதி ஆண்டில், மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இதனைச் செயல்படுத்திட, வேளாண்மை இயக்குநர் அரசின் ஆணையினை கோரியுள்ளார்.

6. எனவே, மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினைச் செயல்படுத்திடும் விதமாக, வேளாண் இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டத்திலும் வேளாண் உற்பத்தியில் விவசாயத் தொழிலாளர்கள் முக்கியப் பங்காற்றுவதால், ஒரே தளத்தில் திறமையான விவசாயத் தொழிலாளர்களைக் கண்டறிவதற்கும், விவசாயக் கூலித் தொழிலாளர்கள் ஆண்டு முழுவதும் மாநிலத்திலேயே வேலை தேடுவதற்கு உதவியாகவும் கூலித் தொழிலாளர்களின் நலனுக்காக

2022-23-ஆம் நிதியாண்டு முதல் வேளாண் தொழிலாளர்கள் குறித்து ஒரு செயலியினை உருவாக்க வேளாண்மை இயக்குநருக்கு அனுமதி அளித்தும், இச்செயலியின் மூலம் விவசாயிகள் எவ்வித இடர்ப்பாடுமின்றி வேளாண் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக அவர்கள் (விவசாயிகள், தொழிலாளர்கள் (ம) முகவர்கள்) குறித்த விவரங்களை பதிவு செய்வதற்கு மூன்று படிவங்கள் (இணைப்பு II,III (ம) IV) உபயோகப்படுத்த வேளாண்மை இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது

**ஆளுநரின் ஆணைப்படி)**

**சி. சமயமூர்த்தி**
**வேளாண்மை உற்பத்தி ஆணையர்**
**மற்றும் அரசுச் செயலாளர்**

பெறுநர்
வேளாண்மை இயக்குநர், சென்னை-5
இயக்குநர்,தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சென்னை-5.
கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர், சர்க்கரைத்
துறை, சென்னை-35
இயக்குநர்,வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை,
சென்னை-32.
தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்), சென்னை -35.
செயல் இயக்குநர், தமிழ்நாடு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு
முகமை, சென்னை-32.
பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம்,
கோயம்புத்தூர்-3.
இயக்குநர், விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று துறை,
கோயம்புத்தூர்-13.
நகல்
மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்
அவர்களின் முதுநிலை தனிச் செயலர், சென்னை-9.
உதவி நிரலர், வேளாண்மை- உழவர் நலத் துறை, சென்னை-9.
உதிரி/இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

31/5/2022
பிரிவு அலுவலர்
31/5/22

## இணைப்பு I

(அரசாணை (டி) எண்.142, வேளாண்மை – உழவர் நலத் (வே.உ.2) துறை, நாள்.31.05.2022)

தமிழகத்தில் வேளாண் கூலித் தொழிலாளர்களின் தேவை அதிகரித்து வருகிறது. வேளாண் கூலித் தொழிலாளர்கள் தங்களின் மாவட்டத்தை விட்டு பிறமாவட்டம் மற்றும் மாநிலங்களுக்கு செல்வதனைத் தவிர்த்து, உள்ளூரிலேயே அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க 2022-2023 நிதியாண்டு முதல் ஒரு செயலி உருவாக்குதல் அதன் குறிக்கோள் மற்றும் நடைமுறைகள் பின்வருமாறு;-

I. குறிக்கோள்:

1. விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு சிறந்த வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
2. திறன் அடிப்படையிலான தொழிலாளர்களை எளிதாகக் கண்டறிய விவசாயிகளுக்கு உதவுதல்.
3. பருவந்தோறும் தொழிலாளர்களைத் தாமதமின்றி அடையாளம் காண விவசாயிகளுக்கு உதவுதல்.

II. "உழவன்" செயலி, உழவர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதால், தனிச் செயலியை பயன்படுத்துவதற்குப் பதிலாக "உழவன்" செயலியில் உள்ள சேவைகளில் ஒன்றாக, வேளாண் கூலித் தொழிலாளர்கள் கிடைக்கும் தளத்தையும் சேர்த்து, விவசாயத் தொழிலாளர்கள், முகவர்கள் மற்றும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், செயலியில் பதிவு செய்திடவும், செயலியை சிறந்த முறையில் பயன்படுத்திட வட்டார அளவிலான வேளாண் துறை அலுவலர்கள் மூலம் செயல்படுத்த வழிவகை செய்ய வேண்டும்.

- வேளாண் இயக்குநரகத்தின் தொழில்நுட்பப் பிரிவு, இச்செயலியை உருவாக்கிப் பராமரிக்க வேண்டும்.

III பதிவு செய்யும் முறை:-

e-சேவை மையங்கள் மூலமாகவோ/ தாமாகவோ வேளாண் கூலித் தொழிலாளர்கள், முகவர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர்களை பதிவு செய்ய வகை செய்யப்பட வேண்டும்.

(அ) வேளாண் கூலித் தொழிலாளர்கள் தாமாகவோ அல்லது e-சேவை மையத்தின் மூலமாகவோ தங்களைப் பதிவு செய்யும் வகையில் வழிவகை செய்யவேண்டும்.

(ஆ) வேளாண் கூலித் தொழிலாளர்களை வழங்கக்கூடிய முகவர்கள் தங்களைப் பதிவு செய்ய வேண்டும்..

(இ) கூலித் தொழிலாளர்கள் தேவைப்படும் விவசாயிகள் தங்களைப் பதிவு செய்ய வேண்டும்.

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

## இணைப்பு-II

(அரசாணை (டி) எண்.142, வேளாண்மை – உழவர் நலத் (வே.உ.2) துறை, நாள்.31.05.2022)

### (வேளாண் கூலித் தொழிலாளர்கள் தாமாகவே பதிவு செய்யும் படிவம்)

1. பெயர்
2. பிறந்த தேதி
3. மாவட்டம்
4. வட்டம்
5. கிராமம்
6. முகவரி
7. கைபேசி எண்
8. ஆதார் எண்
9. வங்கியின் பெயர்
10. வங்கிக்கணக்கு எண்
11. IFSC எண்
12. விவசாயத் தொழிலாளியாக அனுபவம்:------ வருடம்
13. அனுபவமுள்ள விவசாய பணிமுறைகள்

புகைப்படம்

| வ. எண் | விவசாய நடைமுறைகள் | √ குறியிடவும் |
|---|---|---|
| 1 | விதைத்தல் | |
| 2 | நடவு செய்தல் | |
| 3 | களையெடுத்தல் | |
| 4 | நீர் பாய்ச்சுதல் | |
| 5 | சொட்டுநீர் / தெளிப்பான்களின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு | |

| | | |
|---|---|---|
| 6 | உரமிடுதல் | |
| 7 | பயிர் பாதுகாப்பு | |
| 8 | அறுவடை | |
| 9 | விளைபொருட்களைச் சுத்தம் செய்தல் (புடைத்தல்) | |
| 10 | உணவு தானியங்களின் சேமிப்பு | |
| 11 | ஒட்டு கட்டுதல் | |
| 12 | ட்ரோன்கள் மூலம் பூச்சிக்கொல்லி தெளித்தல் | |
| 13 | தோட்டம் அமைத்தல் | |
| 14 | கவாத்து செய்தல் | |
| 15 | கரும்பில் தோகை உரித்தல் | |
| 16 | தெளித்தல் (கை தெளிப்பான் / விசைத் தெளிப்பான் | |
| 16 | மற்றவை | |

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்

இணைப்பு-III

(அரசாணை (டி) எண்.142, வேளாண்மை – உழவர் நலத் (வே.உ.2) துறை, நாள்.31.05.2022)

(முகவர்கள் பதிவு செய்யும் படிவம் )

| புகைப்படம் |
| --- |

1. பெயர்

2. பிறந்த தேதி

3. மாவட்டம்

4. வட்டம்

5. கிராமம்

6. முகவரி

7. கைபேசி எண்

8. ஆதார் எண்

9. வங்கியின் பெயர்

10. வங்கி கணக்கு எண்

11. IFSC எண்

12. முகவராக அனுபவம்:------ வருடம்

13. தற்போது உள்ள ஆண் தொழிலாளர்களின் எண்ணிக்கை :

14. தற்போது உள்ள பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை :

| வ. எண் | விவசாய பணிகள் | √ குறியிடவும் |
| --- | --- | --- |
| 1 | விதைத்தல் | |
| 2 | நடவு செய்தல் | |
| 3 | களையெடுத்தல் | |
| 4 | நீர் பாய்ச்சுதல் | |
| 5 | சொட்டுநீர் / தெளிப்பான்களின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு | |
| 6 | உரமிடுதல் | |

| | | |
|---|---|---|
| 7 | பயிர் பாதுகாப்பு | |
| 8 | அறுவடை | |
| 9 | விளைபொருட்களைச் சுத்தம் செய்தல் (புடைத்தல்) | |
| 10 | உணவு தானியங்களின் சேமிப்பு | |
| 11 | ஒட்டு கட்டுதல் | |
| 12 | ட்ரோன்கள் மூலம் பூச்சிக்கொல்லி தெளித்தல் | |
| 13 | தோட்டம் அமைத்தல் | |
| 14 | கவாத்து செய்தல் | |
| 15 | கரும்பில் தோகை உரித்தல் | |
| 16 | தெளித்தல் (கை தெளிப்பான் / விசைத் தெளிப்பான் | |
| 17 | மற்றவை | |

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

//உண்மை நகல்//

31/5/2022
பிரிவு அலுவலர்

31/5/22

இணைப்பு-IV

(அரசாணை (டி) எண்.142, வேளாண்மை – உழவர் நலத் (வே.உ.2) துறை, நாள்.31.05.2022)

(வேளாண் கூலித் தொழிலாளர்கள் தேவைப்படும் விவசாயிகள் பதிவு செய்யும் படிவம் )

| புகைப்படம் |
|---|

1. பெயர்
2. பிறந்த தேதி
3. மாவட்டம்
4. வட்டம்
5. கிராமம்
6. முகவரி
7. கைபேசி எண்
8. ஆதார் எண்
9. வங்கியின் பெயர்
10. வங்கி கணக்கு எண்
11. IFSC எண்
13. தேவைப்படும் ஆண் தொழிலாளர்களின் எண்ணிக்கை
14. தேவைப்படும் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை :

| வ. எண் | விவசாய நடவடிக்கைகள் | √ குறியிடவும் |
|---|---|---|
| 1 | விதைத்தல் | |
| 2 | நடவு செய்தல் | |
| 3 | களையெடுத்தல் | |
| 4 | நீர் பாய்ச்சுதல் | |
| 5 | சொட்டுநீர் / தெளிப்பான்களின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு | |

| | | |
|---|---|---|
| 6 | உரமிடுதல் | |
| 7 | பயிர் பாதுகாப்பு | |
| 8 | அறுவடை | |
| 9 | விளைபொருட்களைச் சுத்தம் செய்தல் (புடைத்தல்) | |
| 10 | உணவு தானியங்களின் சேமிப்பு | |
| 11 | ஒட்டு கட்டுதல் | |
| 12 | ட்ரோன்கள் மூலம் பூச்சிக்கொல்லி தெளித்தல் | |
| 13 | தோட்டம் அமைத்தல் | |
| 14 | கவாத்து செய்தல் | |
| 15 | கரும்பில் தோகை உரித்தல் | |
| 16 | தெளித்தல் (கை தெளிப்பான் / விசைத் தெளிப்பான் | |
| 17 | மற்றவை | |

சி. சமயமூர்த்தி
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசுச் செயலாளர்

//உண்மை நகல்//

31/5/2022
பிரிவு அலுவலர்